## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும்

உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 880 | அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய போதிலும் 04 உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வைக்க வேண்டிய பிணையின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு சுற்றறிக்கையொன்று விநியோகிக்கப்பட்ட பின்னர் பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்க எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சுற்றறிக்கை | | | |
| (i) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(I) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 09 பந்தி | ஒவ்வொரு நிறுவகத்தினதும் உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் தமது நிறுவனத்திற்காக காலாண்டிற்கு ஒரு முறை உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமை | 2019 சனவரி 01 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை மூலம் | சுற்றறிக்கைக்கு இணங்குவதற்காக கட்டுப்பாட்டு முறைமையொன்று துரிதமாக திட்டமிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழு கூட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக் கழகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் தேவையான பதவியணியினர் இணைக்கப்பட்டதன் பின்னர் முறையாக உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமாக. | |
| (ii) | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான வரைவாக்கப்பட்ட திட்டம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் போது இனங்காணப்பட்ட வேறுபாடுகள் மீண்டும் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்குமாறு பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது இது தொடர்பாக நிறுவகம் தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஏப்ரல் 09 ஆந் திகதிய 9/4 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக கல்விசார் பதவியணியின் விரிவுரையாளர்களின் கல்வி பதவியணியின் ஒழுக்கம் மற்றும் கல்விப் பொறுப்பு தொடர்பான | விரிவுரை பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்கு இடையே இரட்டிப்பு தொடர்பு (dual relationship with students) வெளிப்படுத்து வதற்கு அல்லது இதன் மூலம் தரக் கட்டுப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளை தவிர்ப்பது தொடர்பாக போதியளவு | நிறுவகம் தற்போது பேராதனைப் பல்கலைக்கழத்தின் மூலம் செயற் படுத்தப்படுகின்ற ஒழுக்கம் மற்றும் கல்விப்பொறுப்பு தொடர்பான வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை | உள்ளக வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழிகாட்டல் கோவையின் 5 ஆம் வழிகாட்டி | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும் 2021 ஆம் ஆண்டில் இந்நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு எதிர்பாரக்கப்பட்டுள்ள தாக. | |
| (ஈ) | 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் பிரிவு | ஆகக் குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்த்த பெறுகை செயற்பாடுகள் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிறுவகம் அதன் எதிர்பார்த்த பெறுகைத் திட்டம் எதிர்வரும் 03 ஆண்டு காலப்பகுதிக்காக தயாரிக்கப்படவில்லை என்பது உண்மையாகும். நிறுவகத்தின் எதிர்பாரத பெறுகை திட்டம் தயாரிப்பதற்காக தற்போது உரிய செயற்பாடுகள் எடுக்கப்பட்டு வருவதாக. | அரின் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 43,123,612 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 48,993,216 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,869,604 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு உள்ளக வருமான உழைப்பு ரூபா 4,539,070 ஆல் குறைவடைந்தமை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மீதி ரூபா 1,056,139 ஆலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மூலம் தற்போது நடாத்தப்படும் 51 பாடநெறிகளில் 51 பாடநெறிகளுக்காக கணக்காய்வு திகதி வரையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் | இப்பாடநெறிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆரம்பமாவதற்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பேரவையின் அங்கீகாரத்துடன் 1950 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு அவ்வப்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பபடாநெறிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு உரிய தகவல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 2019 திசெம்பர் 04 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பணத்தை சேகரித்தல், சில்லறை காசுக்குப் பொறுப்பாளராக செயற்படுதல் மற்றும் கணனியில் அது தொடர்பாக கொடுக்கல் வாங்கல்களை கணனிக்கு தரவேற்றுதல் என்பன ஒரே உத்தியோகத்தரால் செய்யப்படுவதால் உள்ளக கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | கணக்குப் பிரிவில் நிரந்தர ஊழியர்களில் குறைபாடொன்று உள்ளதால் ஒரு உத்தியோகத்தருக்கு கூடுதலான பொறுப்புடன் கூடிய கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளன. இதுவரை மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு நிரந்தர அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் அந்த உத்தியோகத்தர்களை கணக்குகள் பிரிவில் சேவைக்காக ஈடுபடுத்தப்படுவர். | உயர்ந்த உள்ளகக் கட்டுபாட்டு முறைமையொன்றை பேணிச்செல்லும் வகையில் கணக்கு பிரிவின் கடமைகளை பகிர்ந்து பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (இ) | நிறுவகத்தின் கட்டிடப் பயன்பாட்டிற்காக 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 1,170,025 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன | குறித்த ஒப்பந்தக்காரர் பூர்த்தி செய்த வேலைப் பகுதிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் முடியுமான வரை ஒப்பந்தத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்து உரிய கொடுப்பனவை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | நிதியத்தை கிடைத்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நிறுவகத்தின் நுழைவு வீதியை விரிவுபடுத்துதல் மற்றும் வாகன தரிப்பிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,666,843 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தம் 2019 மே 27 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | பட்டியல் கொடுப்பனவு தாமதமானமை மற்றும் மேலதிக வேலைகள் அங்கீகரிப்பதில் தாமதம் இந்நிலைமைக்கு காரணமாக இருந்தன. இயலுமான வரை ஒப்பந்தத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாண ஒப்பந்தங்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 2019/2020 கல்வியாண்டிற்காக பிரயோக பொருளாதார விஞ்ஞான கலைமாணி பட்டப்பின் படிப்பு மற்றும் பொருளியல் கலை முதுமாணி பட்டப்பின் படிப்பிற்காக மாணவர்களை பதிவுசெய்து பாடநெறியின் முதலாவது தவணைப் பரீட்சை நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அப்பாடநெறிக்காக 04 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். நிறுவகத்தின் சட்ட விதிகள் மற்றும் வழிகாட்டலுக்கு முரணாக ஒரு தொகுதிக்கு மாத்திரம் வழங்கப்பட்ட வரப்பிரசாதம் எனவும் இதற்காக பதிவுசெய்வதற்கு எதிர்பார்த்தவர்களுக்கு இடம்பெற்ற அசாதாரணம் என்பதாகவும் அவதானிக்கப்பட்டது. | மாணவர்களின் வேண்டுகோளின் பேரில் 2019/2020 கல்வியாண்டின் இரண்டாம் தவணைக்காக பொருளாதார விஞ்ஞான கலை முதுமாணி பாடநெறிக்கு இரண்டு விண்ணப்பதாரிகள் அனுமதிக்கப்பட்டது உண்மையெனவும் குறித்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலித்த பொருளியல் மற்றும் முகாமைத்துவத்திற்கான கல்விக்குழு அம்மாணவர் களிடமிருந்த இரண்டாவது தவணைக்காக அனுமதிப்பதற்கு உரிய தகைமைகளைக் கொண்டிருந்தமையால் அவர்களை இரண்டாவது தவணைக்காக அனுமதிப்பதற்கு மேற்கொண்ட பரிந்துரையின் பிரகாரம் அனுமதித்தல் இடம்பெற்றுள்ளது. | நிறுவகத்தின் சட்டதிட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு புறம்பாக மாணவர்களைப் பதிவு செய்யக்கூடாது உரிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்று போதியளவு விளம்பரமொன்றை ஏற்படுத்தி முறையாக பாடநெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 நிதிய குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| Minan Buddhist College Chaina நிறுவகத்திடமிருந்து மானியமாக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதி வசதி தொகுதியொன்றை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்காக கிடைத்திருந்த ரூபா 6,699,195 தொகை கணக்காய்வுத் திகதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | நிறுவகத்தினால் இப்பணத்தை மாணவர் விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது உரிய கட்டிடத்தை நிர்மாணிப்பது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் மற்றும் உரிய ஏனைய நிறுவனங்களுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இந் நிர்மாண வேலைகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிதியத்தினை விரைவில் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் மூலதன | நிறுவகத்தின் பிரதான பெறுகை திட்டம் சரியான வகையில் | முன்னுரிமையின் பிரகாரம் பெறுகை |

| | | |
|---|---|---|
| தன்மையிலான சொத்துக்களை புனரமைப்பதற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 04 மில்லியன் மற்றும் நிலையான சொத்துக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 08 மில்லியனும் பெறுகை செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்கல் கடந்த காலங்களில் இடம்பெறவில்லை. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 (உ) பிரகாரம் பெறுகைத் திட்டத்தை உரிய காலஎல்லைக்குள் நாளதுவரையாக்கவும் அது தொடர்பாக தேவையான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கும் நிறுவகத்தினால் தற்போது தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக. | திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிகரிக்கப்பட்ட 09 பதவிகளில் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 13 பேர் காணப்பட்டதுடன் ஒப்பந்த அடிப்படையில் 16 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாணடில் ரூபா 6,067,134 தொகை சம்பளம் மற்றும் படிகளாக வழங்கப்பட்டிருந்தன. | நிறுவகத்தின் அதிகரிக்கும் தேவைகளின் பிரகாரம் நிறுவகத்திற்கு தேவையான புதிய பதவிகள் இனங்காணப் பட்டுள்ளதுடன் அதன் பரிகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் பல சந்தர்ப்பங்களில் நிரந்த பதவியணியினர் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள துடன் எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 2016/04 இன் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. | பதவியணியினரை அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் வைத்திருக்க வேண்டும் |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட வருமானம் / செலவினங்களையும் உள்ளவாறான வருமானம் / செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 12 விடயங்களில் 20 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான விலகலொன்றும் இருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக சில செலவினங்களை செலவிடுவதற்கு சந்தர்ப்பமொன்று ஏற்படாமை இந்த விலகல் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருந்தது. இதனால் பாதீடு செய்யப்பட்ட | நடைமுறை சாத்தியமான பாதீடொன்றை தயாரித்து அதற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை. | செலவினங்கள் மற்றும் உள்ள வாறான செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது ஏதேனும் உள்ளவாறான செலவினங்களில் அதிகரிப்பொன்று அல்லது குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள தொடர்பாக மிகவும் சரியான எதிர்வுகூறலை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |